// தனிகவனம் //மிக மிக அவசரம்//

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.3518/ஆ5/2026 நாள். /07/2026

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு பிரிவு தீவிரப்படுத்தப்பட்ட IEC பிரச்சாரம்–2026ன் ஒரு பகுதியாக – வேலூர் மாவட்ட பள்ளி மாணாக்கர்களுக்கு மாவட்ட அளவில் சுவரொட்டி வடிவமைப்புப் போட்டியை நடத்துதல் –சார்பு

பார்வை மாவட்ட சுகாதார அலுவலர்/மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அலுவலரிர் வேலூர் அவர்களின் கடித ந.க.எண்.028/அ2/DAPCU/IEC/SCHOOL/2026, நாள்.28.07.2026 (இவ்வலுவலகம் பெறப்பட்ட நாள். 29.07.2026)

•••••

பார்வையில் காணும் மாவட்ட சுகாதார அலுவலர்/மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அலுவலரிர் கடித்தில் வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு/அரசு நிதியுதவி/தனியார் பள்ளியில் பயிலும் 9ஆம் வகுப்பு மற்றும் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவிகளுக்கு Posters making Thematic Topics 1.HIV.STI Basics, 2. Routes of Transmission, 3.Elimination of Vertical Transmission of HIV Service (EVTHS) Posters Making கருப்பொருள் குறித்த போட்டிகள் மாவட்ட அளவில் நடத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இப்போட்டியானது மாவட்ட சுகாதார அலுவலர் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களின் தலைமையில் நடத்திடவும், ஐந்து உறுப்பினர்கள் கொண்ட நடுவர் குழு (ஜூரி கமிட்டி) மாவட்ட சுகாதார அலுவலர் அவர்களால் குறிப்பிட்ட கருப்பொருள்களின் அடிப்படையில் சிறந்த 3 வெற்றியாளர்களை தேர்ந்தெடுத்து முதல் பரிசாக ரூ.3000/, இரண்டாவது பரிசாக ரூ.2000/– மூன்றாவது பரிசாக ரூ.1000/– வழங்கியும், மேலும் வெற்றி பெற்ற முதல் மூன்று சுவரொட்டிகளை மாநில அலுவலகத்திற்கு அனுப்பப்படும். இப்போட்டியானது 03.08.2026 (திங்கட்கிழமை) அன்று காலை 9.30 மணிக்கு **வேலூர் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப்** பள்ளியில் நடைபெறும்.

மேலும் இப்போட்டியில் அரசு/அரசுநிதியுதவி/தனியார் பள்ளிகளில் ஒரு பள்ளிக்கு ஒரு மாணவன் அல்லது மாணவி மட்டும் கலந்து கொள்ள வேண்டும். மாணவிகளை பெண் ஆசிரியர்கள் மட்டுமே அழைத்துவரவேண்டும் எனவும், போட்டியில் கலந்து கொள்ள வரும் மாணவ/மாணவிகளுக்கு சுவரொட்டி வடிவமைப்புப் போட்டிக்கு தேவையான எழுதுபொருட்கள் (Chart/Sketch/Scale/Pencil) வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இப்போட்டிக்கு ஒருங்கிணைப்பாளர் மற்றும் நடுவராக இணைப்பில் காணும் தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஓவிய ஆசிரியர்களுக்கு தகவல் தெரிவித்து போட்டியில் பங்கு பெற தலைமை ஆசிரியர்கள் மற்றும் தனியார் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – ஒருங்கிணைப்பாளர் /நடுவர்கள்
பட்டியல்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
1.மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
(இடைநிலைக் கல்வி) வேலூர் மாவட்டம்.
(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)

2. அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர்/மேல்நிலைப்பள்ளிகள் தலைமை ஆசிரியர்கள் மற்றும் தனியார் பள்ளி முதல்வர்கள்

3.சார்ந்த ஆசிரியர்கள் (தலைமை ஆசிரியர் மூலமாக)

நகல்–

1. மாவட்ட சுகாதார அலுவலர் / மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அலுவலர் வேலூர் அவர்களுக்கு கணிவுடன் அனுப்பப்படுகிறது.
2. தலைமை ஆசிரியர், ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளி, தகவலுக்காகவும் தக்க நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

**எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு பிரிவு IEC பிரச்சாரம்–2026ன் சுவரொட்டி வடிவமைப்புப் போட்டியின் ஒருங்கிடிணைப்பாளர் மற்றும் நடுவர்கள் விவரம்**

| வ.எண். | பெயர் மற்றும் பதவி திருவாளர்கள் | பணிபுரியும் பள்ளி | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | கே.சித்ரா<br>தலைமை ஆசிரியர் | விகேவிளம் அரசு (பெ)<br>மேல்நிலைப் பள்ளி, வேலப்பாடி | ஒருங்கிணைப்பாளர் |
| 2 | பி.எஸ்.பழனி<br>தலைமை ஆசிரியர் | கே.ஏ.கே.எம். அரசு நகரவை<br>மேல்நிலைப் பள்ளி,<br>சைதாப்பேட்டை, வேலூர் | ஒருங்கிணைப்பாளர் |
| 3 | ஜே.முருகன்<br>தலைமை ஆசிரியர் | அரசு உயர்நிலைப் பள்ளி,<br>மூஞ்சூர்பட்டு | ஒருங்கிணைப்பாளர் |
| 4 | பி.சரஸ்வதி<br>தலைமை ஆசிரியர் | அரசு உயர்நிலைப் பள்ளி,<br>இடையஞ்சாத்து | ஒருங்கிணைப்பாளர் |
| 5 | அ.ஆனந்தன்<br>ஓவிய ஆசிரியர் | தி.மு.கி.வா. அரசு (ஆ)<br>மேல்நிலைப் பள்ளி,<br>காங்கேயநல்லூர் | நடுவர் |
| 6 | பி.தரணிபாபு<br>ஓவிய ஆசிரியர் | அரசு மேல்நிலைப் பள்ளி,<br>கொணவட்டம் | நடுவர் |
| 7 | வி.கவிதா<br>ஓவிய ஆசிரியர் | அரசு (பெ) மேல்நிலைப் பள்ளி,<br>அணைக்கட்டு | நடுவர் |
| 8 | எஸ்.கவிதா<br>ஓவிய ஆசிரியர் | அரசு (ஆ) மேல்நிலைப் பள்ளி,<br>ஊசூர் | நடுவர் |
| 9 | நூர்ஜஹான்<br>ஓவிய ஆசிரியர் | அரசு முஸ்லிம் மேல்நிலைப் பள்ளி<br>வேலூர் | நடுவர் |
| 10 | அ.பிரபுகுமார்<br>ஓவிய ஆசிரியர் | அரசு மேல்நிலைப் பள்ளி,<br>சத்துவாச்சாரி | நடுவர் |

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

24/7/26